## பொதுக்காலம் 5ஆம் ஞாயிறு - இரண்டாம் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

இனிய வாழ்வை அளித்த இறைவனுக்கு நன்றிப்பலி செலுத்த ஏறெடுக்க, இங்கு கூடியிருக்கும் அன்புள்ளங்களை பொதுக்காலம் 5 - ஆம் ஞாயிறு திருப்பலிக்கு வருகவென வரவேற்கிறேன். உண்மையான நம்பிக்கை கொண்டோரின் தேவைகளை, கஷ்டங்களை உணர்ந்தவராக இருந்தார் இயேசு. நமது வாழ்வின் சிக்கல்கள், தடைகள், கண்ணீர்கள் அனைத்தையும் இறைவன் சந்திப்பார் என்ற நம்பிக்கையை மனதில் விதைப்போம்.

“யுத்தம் மறந்து நித்தம் நாம் போராடுகிறோம்; வசந்தமான வாழ்வுக்காக அல்ல; நம் வாழ்வை நாம் வாழ்வதற்காக.”

இன்றைய முதல் வாசகத்தில், வெறுமையான திங்கள்கள் எனக்கு வாய்த்தன. இன்னல்மிகு இரவுகள் எனக்கு பங்காயின என யோபு வருத்தம் மேலிட புலம்புகிறார். இத்தகைய இன்னல்கள் இறைவன் இசைவோடு சாத்தானால் தரப்பட்டவை. துன்பத்தில் துணிவையும், தோல்விகளில் பொறுமையையும் இறைவனிடத்தில் வேண்டும் போது இன்னல்களை இறைவன் மாற்றிடுவார். காயப்படுத்தினாலும் குணமாக்குபவர் இறைவனே என்பதில் உறுதியாய் இருந்தார் யோபு. இழந்தவற்றையெல்லாம் இருமடங்காய்ப் பெற்றுக் கொண்டார். நாமும் துன்பங்கள் வரும் போது துவண்டு விடுகிறோம். நம்பிக்கையில் வறண்டு விடுகிறோம். துன்பங்களை அள்ளிச் செல்லாமல், யதார்த்தத்தை ஏற்றுக் கொள்வோம். நம் வாழ்க்கை பிறர் விரும்பும் வாழ்வாகும்.

“‘நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்கு கேடு’ என்கிறார் பவுல். எப்படியாவது ஒரு சிலரையாவது மீட்கும்படி நான் எல்லாருக்கும் எல்லாம்

ஆனேன்" என்கிறார். இவ்வுலகில் வாழ்ந்த 33 ஆண்டுகளில் கடைசி மூன்றாண்டுகள் தான் இயேசு நற்செய்திப் பணியாற்றினார். இறைவன் நமக்கு கொடுத்த தாலந்துகளையும் வாழ்நாட்களையும் இறைவனுக்குரிய காரியங்களில் பயன்படுத்துவோம். நம் வாழ்வில் வெளிப்படுத்துவோம்.

"கடின மனங்கள் உடைத்து, இனிய உண்மைகளை இதழ்கள் உதிர்க்கும் போது கண்கள் காட்டும் நேரிய பாதையில் கால்கள் நடை போடும்போது நாமும் நல்லவர்களாகிறோம் - நம் வாழ்வும் நற்செய்தியாகிறது.

இன்றைய நற்செய்தி வாசகத்தில் இயேசு, சீமோன் பேதுருவின் மாமியாரை குணமாக்குகின்றார். பிணிகளை போக்கி, பேய்களை ஓட்டி, செல்லும் இடமெல்லாம் நன்மையே செய்து கொண்டு சென்றார். அவரின் பாதங்களில் அமர்ந்துள்ள நாம் பிறரை காரணமின்றி நேசிக்கவும், வெறுக்க காரணமிருப்பினும் அதைக் களைந்து நேசிக்கவும் இன்று அழைக்கப்படுகிறோம். பிறரது வலிக்கு காரணமாயிராமல், வலி மறக்க காரணமாவோம். இரு கரம் குவித்து இறைவனை வணங்குவதிலும், ஒரு கரம் நீட்டி வறியவனுக்கு உதவுவதே உகந்தது. நாம் அனுபவித்த வேதனைகளை பிறரிடத்தில் காணும் போது மூளையின் கட்டளைக்கு காத்திராமல் இதயத்தின் தூண்டுதலால் இரு கரங்களும் அணைக்க முன்வரட்டும் என்ற மனப்பக்குவத்தோடு இத்திருப்பலியில் இணைவோம்.

## மன்றாட்டுகள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. நாடெங்கும் நற்செய்தியை அறிவித்தவரே எம் இறைவா!

உமது பணியை செய்ய நீர் தேர்ந்தெடுத்த எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரையும் ஆசீர்வதியும். அவர்களில் உமது

இறை வல்லமை வெளிப்பட்டு நற்செய்தியை வாழ்வாக்கிட வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. குணமளிக்கும் வல்லவரே எம் இறைவா!

எங்கள் மத்தியில் நோய்களால் அல்லல்படும் சிறுகுழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் உம் கரத்தில் தருகிறோம். அவர்களின் வேதனை நீக்கி, உமது வல்லமையால் தொட்டு குணமளித்திட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. யோபுவின் துன்பங்களை இன்பமாக மாற்றியவரே எம் இறைவா!

எங்கள் வாழ்க்கையில் நாங்கள் எதிர்கொள்ளும் தடைகளில் எங்களோடு இருந்து அதை கடக்கச் செய்யவும், எதிர்பார்க்கும் நன்மை காரியங்களை பெற்றுக் கொள்ளவும் வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. அன்பின் நற்செய்தியை அறிவித்தவரே இறைவா!

எங்கள் குடும்பங்களில் இறைவார்த்தையை வாசித்து, தியானித்து, அதன் வழியில் நடந்து, உமக்கு பிரியமான வாழ்வை மேற்கொள்ள தேவையான வல்லமையை தர வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

5. செல்லுமிடமெல்லாம் நன்மை செய்தவரே எம் இறைவா!

எம் பகுதி மக்களை உம் கரத்தில் தருகிறோம். எங்கள் பகுதியில் போதிய மழையைத் தந்து, நீர்நிலைகள் நிரம்பவும், விவசாயம் செழித்து பொருளாதாரம் மேம்படவும், படிக்கும் மாணவர்கள் சிறந்த ஞானம் பெறவும், வேலைவாய்ப்புக்காக காத்திருப்போருக்கு சிறந்த வேலைகள் கிடைத்திடவும், குடும்பத்தில் சமாதானம் சந்தோசம் நிறைந்திருக்கவும் உமதருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

நன்றி: ஆசிரியை. திருமதி. ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.

Rev. Fr. Amirtha Raj Sundar J., amirsundar@gmail.com; + 91 944 314 0660;

www.arulvakku.com